# அடக்குமுறை பாய்ச்சி அநீதி விளைத்த ஆட்சி!

Phone No 4502
விலை அரை அணா ]
Regd. No.M. 5458
[இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.
MALAI MANI
( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (1—2—50) வெளியீடு (2—2—50) [ இதழ் 157

## 'கெடுபிடி' சாக்காருக்குக் கணியூர் மாநாட்டில் எச்சரிக்கை!

—(o)—

## இலங்கைத் தமிழர் உரிமையைப் புறக்கணித்த பண்டித நேரு

## கைத்தறி நெசவுத் தொழிலாளர் நலன் பற்றி வற்புறுத்தல்

கடந்த ஜனவரி 29-ந் தேதியன்று கணியூரில் நடைபெற்ற கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக மாநாட்டில் குறிப்பிடத்தக்க, இன்றியமையாத் தீர்மானங்கள் பல நிறைவேறியுள்ளன.

ஜனவரி 26-ந் தேதியன்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் திராவிட இயக்கத் தோழர்கள் மீது, சென்னை சர்க்கார் அடக்குமுறையைப் பாய்ச்சி அநீதி விளைத்திருப்பது வெகுவாகக் கண்டிக்கப்பட்டது. புதிய அரசியல் திட்டத்தை மாற்றியமைக்க, கூட்டு முன்னணியொன்றை யமைக்க திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழு வழி வகை செய்ய வேண்டுமென்ற சென்னை மாநாட்டுத் தீர்மானம் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர் உரிமையைப் பாதுகாக்குமாறு சென்னை சர்க்கார் வேண்டிக்கொண்டிருந்தும், இலங்கை சென்றிருந்த இந்தியப் பிரதமர் நேரு இதைப்பற்றிப் பொருட்படுத்தாது கண்டு மாநாடு வருத்தம் தெரிவித்து, மேலும் அங்ஙன் தீர்மானத்தை சென்னை சர்க்கார் வலியுறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது மாநாடு.

கோவை, ஜன. 30—

ஜனவரி 29-ந்தேதி கணியூரில் நடைபெற்ற கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:—

(1) திராவிட சமுதாயத்தின் விடுதலைக்கும், வளர்ச்சிக்கும் தீவிர பணியாற்றிய விருதைப் பெருங்கையர் வெ. சிதம்பரனார், அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி, ஜலகண்டபுரம் பார்த்தசாரதி ஆகியோரின் மறைவுக்கு இம்மாநாடு வருந்துவதுடன், தனது அனுதாபத்தையும் அன்னார்களின் குடும்பத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

(2) A. இலங்கையிலுள்ள தமிழர்களின் நிலையை, உரிமையைப் பாதுகாக்குமாறு சென்னை சர்க்கார், தீர்மானம் மூலம் வேண்டிக் கொண்டிருந்தும், அண்மையில் இலங்கைக்குச் சென்றிருந்த இந்திய சர்க்கார் பிரதமர் கனம் நேரு, அவர்கள், இதைப் பொருட்படுத்தாததுகண்டு இம்மாநாடு பெரிதும் வருந்துகிறது.

B. எனவே, சென்னை சர்க்கார் இதோடு நின்றுவிடாமல் தங்களது தீர்மானத்தை வலியுறுத்தி, இலங்கையிலுள்ள பத்து லட்சம் தமிழர்களின் உரிமையை நிலைநிறுத்த முற்பட வேண்டுமென்று இம்மாநாடு சர்க்காரைவற்புறுத்துகிறது

மொ:—கோபி ராஜூ.

வழி:—என். இ. பாலகுரு.

(3) தமிழ்நாட்டில் பஞ்ச நிலை ஏற்படும் அறிகுறிகள் ஆங்காங்கே காணப்படுவதால், குறிப்பாக இராமநாதபுரம், கோவை மாவட்டங்களில் கால் நடைகளுக்குக்கூட தீவனத்திற்கு நெருக்கடியுண்டாகியிருப்பதால வங்கத்தைப போன்ற பஞ்சம் தமிழகத்திலும் ஏற்படும் என்று இம்மாநாடு அஞ்சுகிறது. எனவே, அரசியலார், அந்நிலை ஏற்படுவதற்குள் மக்களின் உணவு நெருக்கடி தீர வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் உடனடியாகச் செய்யுமாறு இம்மாநாடு வலியுறுத்துகிறது.

மொ: ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

வழி: பொள்ளாச்சிஇராமானுசம்

(4) இம்மாகாணத்திலுள்ள ஐந்து லட்சத்துக்கு அதிகமான கைத்தறி நெசவாளர்களும், அவர்கள் குடும்பங்களும் தங்களின் உற்பத்திச் சரக்குகளுக்குப் போதுமான கிராக்கி இல்லாததினுல் எங்கும் தேக்கம் ஏற்பட்டு, அதன் பயனாய் நெசவாளிகளுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டும் பல லட்சக்கணக்கான குடும்பங்கள் பிச்சையெடுக்கும்படியான கேவல நிலை பிறந்தும், இந்த சங்கடத்திலிருந்து நெசவுத் தொழிலாளர்களைக்காப்பாற்ற இந்த சர்க்கார் எந்தவித முயற்சியும் எடுத்துக்கொள்ளாமலும், அலட்சியப்படுத்தியும் வருவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், மேலும் நிலைமையை இப்படியே நீடிக்க விடுவது, நாட்டின் அமைதிக்கேடுகளை விளைவிக்கும் என்று சர்க்காருக்கு எச்சரிக்கிறது.

மொ:—ந. நமச்சிவாயம், பொள்ளாச்சி.

வழி:—கோவை. ஏ. பொன்னுசாமி

(5) நாட்டிலே பஞ்சம் தோன்றிவரும் இந்நாளில், தொழிற்சாலைகளில், குறிப்பாக நூற்சாலைகளில் போதிய பஞ்சு இல்லையென்ற காரணத்தைககாட்டி, வேலை நாட்களைக் குறைப்பதும், வேலையிலிருந்து நீக்குவதும், ஆள் குறைப்பு திட்டமென்பதைக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# உணர்ச்சியூட்டும் சொற்பொழிவுகள்; உறுதிமிக்கத் தீர்மானங்கள்!

## எழுச்சியுற்ற இளைஞர்கட்கு எதிர்கால நற்பாதை!

## கோவை மாநாட்டு நிகழ்ச்சிகள்

கணியூர், ஜன. 30—

கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டின்பிற்பகல் நிகழ்ச்சி, நேற்றுமாலை 3 மணிக்கு ஆரம்பமாயிற்று.

மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளும், மற்றைய தோழர்களும் உணவருந்திய பின்னர், மாலை 2 மணிக்கே மாநாட்டுப் பந்தலில் குழுமத் தொடங்கிவிட்டனர். உணவு நல்லமுறையில் தயாரிக்கப்பட்டு மிக்கக்கனிவுடன் வழங்கப்பட்டது, பாராட்டுவதற்குரியதாக விளங்கிற்று. கோடுமரைச் சார்ந்த இளைஞர்கள் இருவர் இன்னிசைப் பாட்டுகள் பாடி மக்களை மகிழ்வித்தனர்.

தலைவரும், ஏனைய சொற்பொழிவாளர்களும் மேடையின்மீது வந்து அமர்ந்ததும் நிகழ்ச்சி துவக்கமாயிற்று முதலில் தோழர் க. அன்பழகன் அவர்கள் ஜனவரி 26 குடியாட்சி திருவனத்தைப் பற்றியும், அரசியலை நிர்ணயித்த சபையின் அலங்கோலத்தைப் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினர்.

பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் நாட்டின் பொருளாதார நிலைமையைப் பற்றியும், அரசியலாரின் திட்டமற்றப் போக்கைப் பற்றியும் காங்கிரஸ் ஆளவந்தார்களின் ஆணவச் செயல்கள் அழிவுப் பாதையில் கொண்டுபோய் விடத் தக்கனவாக அமைந்திருக்கின்றனவென்றும், அரசியலார் எச்சரிக்கையாக ஆட்சி நடத்த வேண்டும் என்றும் தெளிவாக எடுத்துக்கூறினர்.

பின்னர் பல தீர்மானங்கள் (வேறோர் இடத்தில் தரப்பட்டிருக்கின்றன), நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தான் தோழர்கள் ப. உ. சண்முகம், கோபி ராஜூ, என். இ. பாலகுரு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பொள்ளாச்சி ராமானுசம், பொள்ளாச்சி நமசிவாயம் கோவை ஏ. பொன்னுசாமி கே. ஏ. மதியழகன். ஏ. பாலசுந்தரம், சஞ்சீவிராஜ், அ. சபாலு, சி. பி. சிற்றரசு, பல்லடம் பொன்னுசாமி, எஸ். ஆர். சுப்பிரமணியம், என். வி. நடராசன். டி. கே சீனிவாசன், இரா. நெடுஞ்செழியன், ஏ. சித்தையன் ஆகியவர்கள் சிறந்த விளக்கவுரைகள் ஆற்றினர்கள். தீர்மானங்கள் எல்லாம மாநாட்டினரால் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

இறுதியாகத் தீர்மானங்கள் எல்லாவற்றையும் பொது நோக்காகக் கொண்டு, கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி.என். அண்ணாத்துரை அவர்கள் சுமார் 1-45 மணி நேரம் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் தலைவரவர்கள் இரண்டொரு கருத்துக்களைக் கூறி, முடிவுரையை நிகழ்த்தினர்கள்.

பொதுவாகக்கூறின் மாநாட்டில் ஆற்றப்பட்ட சொற்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## ஹைட்ரோஜன் குண்டு அமெரிக்காவின் மனக்கோட்டையே

—(o)—

## பிரிட்டிஷ் விஞ்ஞானி பெர்னல் தரும் தகவல்

கொழும்பு, ஜன. 31—

"ஹைட்ரோஜன குண்டு அமெரிக்காவின் மனக்கோட்டையேயாகும். இப்பொழுது ரஷ்யாவிடமும் அணுக்குண்டு இருக்கிறதென்று ஏற்பட்டுவிட்டதால், உலக சமாதானத்திற்கு உறுதியளிப்பதாகவே அது இருக்கிறது என்பது என் அபிப்பிராயம்" என்று பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானி பேராசிரியர் தோழர் ஜே. டி. பெர்னல் இங்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறினர்.

ராணுவ பொருளாதார பாதுகாப்பிற்கு 'இரும்புதிரை' இருப்பது அவசியமே என்று அவர் கூறினர்.

இவர் இலங்கை விஞ்ஞான சங்க அழைப்பின் பேரில் அச்சங்கத்தின் ஆதரவில், சில சொற்பொழிவுகள் செய்ய இங்கு வந்திருக்கிறர். அதன் ஆதரவில் மீண்டும் தான் சொற்பொழிவு செய்யவேண்டும் என்ற நிபந்தனைக்கு அவர் உட்பட மறுக்கவே, விஞ்ஞான சங்கம் தன் அழைப்பை வாபஸ் பெற்றுவிட்டது. இதை அவர் பிரஸ்தாபித்து இலங்கை விஞ்ஞான சங்கத்தின் போக்கு மிகவும் வருந்தத்தக்கதாகும் என்று குறிப்பிட்டார். இம்மாதிரி இவ்வுலகில் வேறு எங்குமே யாரும் நடந்து கொண்டதில்லை என்று கூறி, இந்தியாவில் தனக்கேற்பட்ட வரவேற்பைப் பாராட்டிக் கூறினர்.

## ஐ. நா. மனித உரிமை சாசனம்

புதுடில்லி ஜன 31—

ஐ. நா. மனித உரிமை சாசனம் பொது அசெம்ப்ளியில் ஏற்கப்பட்டு சர்வதேச சட்டமாக ஆகும்போது, இந்திய சட்டங்களில் சில திருத்தங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

இந்திய பீனல் கோடிலும், ஜெயில் மான்யூவெல்களிலிருந்து கசையடி, பிரம்படி கொடுப்பதை எடுத்துவிட வேண்டியிருக்கும்.

விசாரணைக் கைதி சாட்சிகள் அவசியம் கர்தாகவேண்டும் என கட்டாயப்படுத்த ஐ. நா. கவனென்டமூலம உரிமை உண்டு என்றும், ஆனால் பீனல் கோடின்படி இந்த உரிமை மாஜிஸ்ட்ரேட்டின் இஷ்டத்தின்பேரிலேயேகைதிக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றிருக்கிறது. ஆகவே இதையும் மாற்ற வேண்டிவரும்.

ஐ. நா. மனித உரிமை சாசனம் மனித உரிமை கமிஷன் மார்ச்ச மாதம் கூடும்போது பூர்த்தி செய்யப்பட்டு ஐ. நா. பொருளாதார சமூக கவுன்சிலுக்கு சமர்ப்பிக்கப்படும். அதன் பின் அது ஐ. நா. பொது அசெம்ப்ளிக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும்.

# மாலை மணி

சென்னை 1—2—50 புதன்கிழமை


# யார் குற்றவாளி?

தேசியத் தலைவர்கள் எனப்படுபவர்களால் நடத்தப்பெறும் முதலாளித்துவ சர்க்காரொன்று கடைசி மூச்சு உள்ளவரைத் தனது நிலையைப் பாதுகாத்துக்கொள்ள, மக்கள் கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தூவி, மேலும் பல காலம் 'ஜீவித்து' வர பற்பல 'ஸ்டண்ட' வேலைகளை மேற்கொள்வதுண்டு. இது வரலாறு கண்ட உண்மை. அத்தகைய வேலைகளில் இந்திய தேசிய சர்க்கார் ஆரம்ப கால முதலே ஈடுபட்டு வந்திருப்பதை சாதாரண மக்களும் நன்குணர்வர். 'இந்தியாவுக்கு ஆபத்து,' 'ஒற்றுமைக்குப் பேராபத்து,' 'ஒத்துழைப்பு தாருங்கள்,' 'உற்பத்தியைப் பெருக்குங்கள்,' 'உங்கள் சர்க்காரைத் தடுமாற வைக்காதீர்' என்பன போன்ற பற்பல 'தேசீய அரசியல் வர்த்தகக் குறிச்சொற்களை ஆளவந்தார்கள் ஆட்சி பீடம் ஏறிய காலந்தொட்டே அள்ளி அள்ளி வீசி, மக்களின் மன நிலையில் ஒரு மருட்சியினையும், பீதியையும் ஏற்படுத்தி வந்திருக்கின்றனர். மருட்சி கலந்த பீதி நிலைமையைக் கிளப்பிவிட்டு, பாமர மக்கள் வேறெது பற்றியும் சிந்திக்க முடியாத ஒரு சூழ்நிலையையுண்டாக்கி; ஆட்சியதிகாரப்பயனை அறுவடை செய்துகொள்வது தேசீய சர்க்காரெனப்படும் பித்தலாட்ட சர்க்காரொன்றின் பண்பும் பயனுமாகும். இதைத்தான் செய்துவந்திருக்கிறது இந்திய சர்க்காரெனில், அதனை யாரே மறுக்க முடியும்?

ஆட்சிக் கடிவாளத்தை யேந்தி நிற்போர் அதிகார பலத்தால், பிற்போக்குப் பத்திரிகைகளின் பக்க உதவியால், அரசாங்க ஆதிக்கத்திலுள்ள வானொலியின் வியாபகத்தால் எதையும் பேசலாம் —எதையும் செய்யலாம், எதிர்ப்போரை எந்தச் சட்டத்தைக் கொண்டும் சாடி வீழ்த்தலாமென்று நினைப்பரேல, அவர்களது அகங்கார மனோபாவத்தைஎன்றேனும் ஒருநாள் மக்கள் மட்டந்தட்டி, புத்திபுகட்டி விடுவரென்பது ஒரு தலை. சர்வாதிகார பாஸிஸ மனப்போக்குடை முதலாளித்வ ஆட்சியொன்றின போக்கு நாளடைவில் புழுவையும் போரிட வைத்து விடுமென்பது உறுதி. மக்களின் மௌடிகத்தில் தொடர்ந்து காலந்தள்ளிக்கொண்டிருக்க இயலாத வகையில் பெருவாரியினர் விழிப்புற்று விட்டனரென்பதையும், அதை ஆளவந்தார் ஐயந்திரிபற உணர்ந்து கொண்டுவிட்டனரென்பதையும் ஆட்சி பீடத்தலைமையாளர்கள் சிலபலரின் கூற்றுக்கள்கொண்டே தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம். மக்களைப் பேதிக்க வைத்து வந்தக் காலம் மாறி, இன்று ஆட்சியாளரே, ஆணவங் குலைந்து ஏதேதோ பேசி இடையிடையே — இதுவரை மறைத்து வந்திருக்கிற உண்மைகளையும் கக்கிவிட வேண்டிய கட்டாய நிலைக்கு வந்துவிட்டனர்

**'அரசியல் விடுதலை கிட்டி விட்டதால், இனிஎவ்வித வேலையும் கிடையாது என்பதல்ல பொருள். உண்மையைக் கூற வேண்டுமானால், இந்தியாவுக்கு அரசியல் விடுதலைவெகு சுலபமாக வந்துவிட்டது. அப்படி அது எளிதில் வந்த காரணத்தால்தான், மக்கள் அதனை மதிக்காமலிருக்கிறார்கள்.'**

நாட்டின் நாசகார சக்தியோ,' 'குழப்பம் விளைக்கும் கும்பலோ,' 'சந்தர்ப்ப வாதிகளோ,' 'வகுப்புத் துவேஷிகளோ' சாற்றிய கூற்றல்ல இது; தேசீய சர்க்காரின் தலைமையிடத்திலுள்ள சர்தார் பட்டேல், அண்மையில் ஆனைத்திந்திய கைத்தொழில் கண்காட்சியைத் துவக்கிவைத்த போது கக்கினார் இவ்வுண்மையை. 'தரித்திர நாராயணர் தியாகத் தீயில் குதித்துத் தழும்புகளேற்று, அன்னை பாரதமாதாவின் அடிமை விலங்கை உடைத்துத் தகர்த்தனரென்றும், இந்நாட்டிலுள்ள இந்நாட்டுக்குச் சொந்தமான தந்திக்கம்பிகளை யறுத்து தபாலாபீஸ்களைக் கொளுத்தி, தண்டவாளங்களைப்பெயர்த்து -அவற்றின் மத்தியிலெல்லாம் சுதந்தர ஜோதி சுடர் விட்டுப் பிரகாசிக்கக் கண்டதால்தான் வெள்ளையன் கிலிகொண்டு, சுயராஜ்யத்தைக் கொடுத்தோடிவிட்டானென்றும் நாட்டு மக்களிடையே பிரசாரஞ் செய்யப்பட்டு வந்ததை நம்பினர் பெரும்பாலோர். நடப்பறிந்தோர் பற்பலரும் இக்கயிறு திரிப்பைக்கண்டு எள்ளி நகையாடியதோடு, மக்கள் நிலை கண்டும் பரிதாபப்பட்டனர். உண்மை ஒரு நாளைக்கு வெளி வந்தே தீருமென்று தேறித் திடம் பெற்றது.

பொருளாதார நிலைச் சீர்கேடு, உலக அபிப்பிராயம், வளர்ந்து வரும் சமதர்மக் கோட்பாடு, புரையோடி வரும ஏகாதிபத்தியம், இரண்டாவது உலகப் பெரும் போர் —ஆதுதுணையும் பெருந்துணையாயிருக்கின்றன, வெள்ளை ஏகாதிபத்தியம் தனது இறுகிய பிடிப்பிலிருந்து இந்திய உபகண்டத்தைத் தளர்த்தி விடுவதற்கு உண்மையுணர்ந்திருக்கும் அரசியலறிஞர்கள், அனைவரும் இதனை ஆரம்பத்தில் எடுத்துரைத்தனர் – ஆனால் கேலி செய்யப்பெற்று இடித்துரைக்கப்பட்டனர். இது காரணமாகப்பெரும் பதவிகளிலிருந்தோர் வீட்டுக்கனுப்பப்பட்டதுமுண்டு. ஆனால் இன்று பட்டேல் கூறுகிறார், நமது சுயராஜ்யம் கஷ்டப்பட்டு சம்பாதிக்காத சொத்து என்று! இக்கசப்பான உண்மையை அவர் மனமுவந்து சொல்லவில்லை; சொல்ல வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டு விட்டார். தேசீய சர்க்கார் ஜீவியத்தின் அரிச்சுவடியைப் படித்து வரும்போது– அதாவது உற்பத்தியைப் பெருக்குங்கள். ஒத்துழைப்பு தாருங்கள் என்று பல்லவி பாடிவரும்போது, ஆத்திரங்கொண்டவராய் இவ்வுண்மையைக் கூறிவிடவேண்டியவரானார் சுயராஜ்பத்தை மக்கள் மதிக்கவில்லை. சுயராஜ்யத்தின் சொட்டையோ, அதை நிர்வகிப்போரின் திறமையின்மையோ இதற்குக் காரணமல்ல; ஆனால் எது காரணமென்றால் அது எளிதில் கிடைத்துவிட்டதுதான் என்ற பொருள் படப்பேசியுள்ளார் பட்டேல்.

சுயராஜ்பத்தை மக்கள் மதிக்காததற்குக்காரணம் பட்டேல் கூறுவதுபோல்; அது எளிதில், கிடைத்ததுமட்டுமல்ல மக்கள் தங்களைத் தாங்களே தயாரித்துக் கொள்வதற்கு முன்பு, இங்கு சுயராஜ்யம் வந்துவிட்டது, சுயராஜ்பமென்பதற்குச் 'சாண்டலென்பதையேப் பொருளாகக்கொண்டோர் கையில் அது சிக்கிக் கொண்டது. எந்த மக்களிடையே அன்று பட்டேல் கட்சியினர் 'பாலுந்தேனும் கரைபுரண்டோடும் சுதந்திர பாரதத்தில்' என்று வாய்ப்பறை சாற்றினரோ, அந்த மக்கள்தான் இன்று சுயராஜ்யத்தை மதிக்காமலிருக்கிறார்கள்! இது யாருடைய குற்றம்? நோயாளி குற்றமா, வைத்தியர் குற்றமா?

## அறிவுக் கதிர்!

"புத்திசாலியான மனிதன் தன்னைச் சார்ந்து நிற்கும் பொருள்களிலேயே இன்பத்தைக்காண முயல்வான். மனித உணர்ச்சி மூலமாக அல்லாமல் வேறு எந்த வகையாலும் இது சாத்தியமல்ல"

—டேவிட் ஹியூம்.

## பிரிட்டனுக்கு – யு. எஸ். உதவி

பிரிட்டனின் ஸ்டர்லிங் சட்டலைத் தீர்க்க அமெரிக்கா உதவினால் பிரிட்டன் ஐரோப்பிய நாடுகளுக்கும், காமன்வெல்த்துக்கும் அதிக உதவி செய்ய முடியும் என்பதை, யுனைடெட் ஸ்டேட்ஸ் அறிந்தே இருக்கிறதென்றும், ஆனால் இது சம்பந்தமான முடிவு பிரிட்டிஷ் பொதுத் தேர்தல் முடிவடையு முன் எதிர்பார்க்க முடியாதென்றும் 'ஸண்டே டைம்ஸ்' வாஷிங்டன் நிருபர் பிராண்டன் கூறுகிறார்.

இந்த விஷயமாகப் பூர்வாங்க பேச்சுவார்த்தைகளை நடத்த பிரிட்டிஷ் சர். ஆலிவர் பிராங்கஸ் சனிக்கிழமை லண்டனைவிட்டு யுனைடெட் ஸ்டேட்ஸுக்குப் புறப்பட்டிருக்கிறார் என்றும் அவர் கூறுகிறார். —ருாய்டர்.

தாம்பரத்திலுள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் 63-வது ஆண்டு விழாவில், 1—2—50 புதன் மாலை 5 மணிக்கு தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## ஆறு வாரத்தில் ரேடியோ எஞ்சினீரிங்!

சாதாரணமாக ரேடியோ என்ஜினியரிங் சர்டிபிகேட் பெறுவதற்கு இரண்டு வருடங்கள் இன்ஸ்டிடியூட்டுகளில் பயில வேண்டும்.

மதுரை ஜில்லாவில் கோடிநாயகனூரைச் சார்ந்த அட்வோகேட் தோழர் சான்முகம்மது என்பவர்ஆறுவாரத்தில்இதைப்பயின்று கோயமுத்தூர், கைத்தொழில் முதலாளியுமான தோழர் ஜி.டி. நாயுடு அவர்களின் மேற்பார்வையில் நடைபெறும் கோயமுத்தூர் "இன்டஸ்ரியல் லேபர் வெல்பேர் சங்கத்தில்" பாஸ்செய்து சர்டிபிகேட் பெற்றுவிட்டாராம்.

சமீபத்தில் கோயமுத்தூரிலிருந்து சென்னை வந்திருந்தபொழுது தோழர் ஜி. டி. நாயுடு இதைப்போல அச்சகத்தின் சிலெக்ட்ரிகுலேஷன், இண்டர்மீடியட் வாசித்த மாணவர்கள் ஆறு வாரத்திலே சர்டிபிகேட்டுகள் பெற்றிருக்கின்றனர் என்று கூறினார்.

தோழர் சான்முகம்மது இப்பொழுது தன்னுடைய சொந்த ரேடியோ சர்வீஸ் போடிநாயகனூரில் ஏற்படுத்துவதற்குத் தீர்மானித்தள்ளதாகத் தோழர் நாயுடு கூறினார்.

## புது சர்வதேச தொழிற்சங்க பெடரேஷன்

லண்டன், ஜன. 31—

புது சர்வதேசத் தொழிற்சங்க பெடரேஷன் ஐ.நா.வின் அங்கீகாரத்தைக் கோரி ஐ.நா.வின்காரியதரிசி ஜெனரல் டிரிக்வேலிக்கு மனுச் செய்து கொண்டிருக்கிறது.

ஏற்கனவே யுள்ள பழைய தொழிற்சங்க பெடரேஷன் இன்னும் ஐ.நா.வின் அங்கீகாரத்தைப் பெற்றே வந்தாலும் கூட ஐ.நா. வுடன் புது பெடரேஷன் மனப்பூர்வமாக ஒத்துழைத்து வேலை செய்ய முடியுமென்று புதுதொழிற்சங்க பெடரேஷன் வட்டாரங்களில் கூறப்படுகின்றன.

## ஹைட்ரோஜன் வெடிகுண்டை யு. எஸ். தயாரிக்குமா?

ஹைட்ரோஜன் (வீசிய அணுச்) குண்டைத் தயாரிக்க வேண்டுமா என்ற விஷயமாக, யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் இவ்வாரம் முடிவு செய்யுமென்று தெரிகிறது.

இந்தக் குண்டைத் தயாரிக்கவே வேண்டும் என்றஅபிப்பிராயம் பலப்பட்டு வருவதாகவே தெரிகிறது.

# சுயதேவையைப் பூர்த்தி செய்ய முயலுக!

(0)

# உற்பத்திப் பெருக விவசாயிகட்கு ஊக்கம் தேவை

"உற்பத்தி பெருக்கத்தினால் மட்டும் உணவு விஷயத்தில் சுய தேவை பூர்த்தி நிலையை எய்திவிட முடியாது. கிடங்கு வசதிகளும், போக்குவரவு வசதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டாக வேண்டும்" என்று ஆக்ஸ்போர்ட் விவசாயப் பொருளாதார நிபுணரான தோழர் ஆஷ்பி என்பார் அண்மையில் தெரியப்படுத்தியிருந்தார்.

பொருள் உற்பத்தியைப் பெருக்குங்கள், பெருக்குங்கள் என்று அடிக்கடி உரத்த குரலில் பேசும் நம் ஆட்சியாளருக்கு, தோழர் ஆஷ்பிரான் அறிவுரையை அப்படியே அர்ப்பணம் செய்ய விரும்புகிறோம்

தோழர் ஆஷ்பி மேலும் பேசுகையில், விவசாயப் பள்ளிகள் நிறுவப்படுவதுடன், விவசாயிகளுக்கு உற்சாக மூட்டுவதும் அவசியம் என்பதையும் அவர் வற்புறுத்திக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆல்பேனிய ராணுவத்தில் கலகம்

லண்டன், ஜன. 30—

ஆல்பேனிய ராணுவத்தில் கலகம் ஏற்பட்டிருப்பதாக இங்குக் கிடைத்துள்ள அந்தரங்கமான செய்திகளிலிருந்து தெரிகிறது. டிராணுவிலுள்ள தேசிய பாதுகாப்பு டிவிஷனில் புரட்சிகரமான மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

கோர்கா என்ற இடத்திலும் ராணுவத்தில் கலகம் ஏற்பட்டதென்றும், அங்கு கலகம் செய்தவர்கள் விலங்கிடப்பட்டு, தெருக்களில் இழுத்துச் செல்லப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

ஆல்பேனிய அதிகாரிகள் யூகோஸ்லாவியாவிற்குள் தப்பிச் சென்றவண்ணமாக இருக்கிறார்கள். இவர்களில் சிலர் சுட்டுத் தள்ளப்பட்டிருக்கின்றனர். தலைமைப் பதவிகளை ரஷ்யர்கள் எடுத்துக்கொண்டதை ஆட்சேபித்தே இந்தக் கலகம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

## இலங்கை இந்தியர் பிரஜாஉரிமை

கொழும்பு, ஜன. 31—

இலங்கை வாழ் இந்தியர் பிரஜா உரிமை சட்டத்திலுள்ள சில அபத்தமானஷரத்துகளைத்திருத்த, இலங்கை சர்க்கார் முன் வரும் பட்சத்தில் இலங்கை பார்லிமெண்டில் உறுப்பினர்களாக உள்ள இந்தியர்களும், பாக்கிஸ்தானிகளும் இலங்கை சர்க்காருடன் ஒத்துழைக்கலாம் என்று தெரிகிறது.

பண்டித நேரு இலங்கைக்கு வருகை தந்து அவர்களைச் சந்தித்துப் பேசியபின்பே இந்த மாதிரி மனப்பான்மை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

சட்டத்தைத் திருத்தும் விஷயமாக இலங்கை பிரதம மந்திரி தோழர் சேனநாயகாவைச் சந்தித்துப் பேசும்படி இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் தோழர் வி. வி. கிரி இந்திய சர்க்காரால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

## பிரிட்டிஷ் கப்பல்களை எகிப்து வாங்குகிறது

கெய்ரோ, ஜன. 30—

பிரிட்டனிடம் எகிப்து ஆர்டர் கொடுத்த மூன்று கப்பல்களில் இரண்டு எகிப்திய கடற்படையிடம் சீக்கிரமே ஒப்படைக்கப்படுமாம் என்று தெரிகிறது.

அநேகமாக பிப்ரவரி மாதக்கடைசிக்குள் இவை வந்துசேரலாம்.

## எரு மாத்திரைகள்

கிழக்கு ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் சர்க்கார் நடத்தும் நிலக்கடலை சாகுபடிக்காக எரு மாத்திரைகள் தயாரிக்கப்பட்டு இங்கிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றன. சூப்பர்பாஸ்பேட் என்ற இந்த எருவின் மாத்திரை ஒன்றை ஒவ்வொரு செடிக்கும்கீழ் நட்டுவிட்டால்போதுமாம்.

# அடக்குமுறை பாய்ச்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையாள்வதும் காட்டிலே பெரிய நெருக்கடியை உண்டாக்குமாதலால், சர்க்கார் உடனடியாக தொழில் நிலையங்களுக்கு உத்தரவிட்டு, அவர்களுக்குப்போதிய பஞ்சு மற்றவசதிகளையும் கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டக் கொடுமையைத் தலைகாட்டாது செய்யுமாறு இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: கே. ஏ. மதியழகன்

வழி: ஏ. பாலசுந்தரம்

(6) நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் உணவு ஆராய்ச்சிக் கழகத்தை டெல்லிக்கு மாற்ற விருக்கும் யோசனையை அறிந்து இம்மாநாடு வருந்துவதுடன், அந்த யோசனையை உடனே கைவிடுமாறு மத்திய சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: சஞ்சீவி ராஜு

வழி: அ. ச. பாலு

(7) உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் என்ற பேரால அரசியலார் வீண் செலவையும், பயனற்றமுறைகளையும் கையாள்வதை விடுத்து, அதிக உணவு உற்பத்திசெய்வதற்கான சாதனங்கள் (நீர் வசதி, விவசாய இயந்திரச் சாதனங்கள், உரம், வித்து இவைகள் கட்டுப்பாடுவிலக்கு) உடனடியாகக் கிடைக்குமாறு நடைமுறையில் கவலை செலுத்துமாறு அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்:—சி. பி. சிற்றரசு.

வழி:—பல்லடம் பொன்னுசாமி, எஸ். ஆர். சுப்ரமணியம்.

(8) A. நாட்டின் அமைதி கெடாத வகையிலும், மக்களின் வாழ்வு சீர்குலையாத முறையிலும் பணியாற்றி வரும் திராவிட இயக்கத்தின் மீதும் இயக்கத்தின் வெளியீடுகள், புத்தகங்கள், நாடகங்கள் மீதும், அவைகளை வெளியிடும் பிரசுரகர்த்தர்கள், ஆசிரியர்கள், அச்சகத்தார் ஆகியோர் மீதும் தடை, பறிமுதல், வழக்கு தொடுத்தல் ஆகிய அடக்குமுறைகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், மேலும் மேலும் இவ்விதப் போக்கினையே அரசியலார் கையாண்டால், அதை எதிர்த்துத் தக்க நடவடிக்கைகளில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட நேரிடும் என்பதை, அரசியலாருக்கு இம்மாநாடு எச்சரிக்கை செய்கின்றது.

B திராவிடத்தின் மீது திணிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் திட்டத்தின் பிரகடன நாளாகிய ஜனவரி 26-ந்தேதியன்று, மிக அமைதியான முறையில் தங்களது அதிருப்தியைக் காட்டிக்கொண்ட திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய தோழர்கள் மீது சென்னை, கரூர், ராஜாமடம், அறந்தாங்கி, போளூர் போன்ற இடங்களில் அடக்குமுறையைப் பிரயோகித்து, போலீஸ் காவலில் வைத்தும், கூட்டங்களுக்குத் தடைவிதித்தும், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவைகளின் கொடிகளை அதிகாரிகள் இறக்கியும், விளைவித்துள்ள அநீதியையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

முன்: என். வி. நடராசன்

வழி: டி. கே. சீனிவாசன்

(9) புதிய அரசியல் திட்டத்தை மாற்றியமைக்க, கூட்டு முன்னணியை அமைக்க திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு வேண்டிய வழிவகைகளைக் கண்டறிய வேண்டுமென்று, சென்னை நகராட்டில் நிறைவேறிய தீர்மானத்தை இம்மாநாடு வலியுறுத்துவதுடன், உடனே அதற்காவன செய்யுமாறு தலைமைக் குழுவைக் கேட்டுக்கொள்கிறது.

முன்:-இரா. நெடுஞ்செழியன்

வழி:—சேலம் ஏ. சித்தையன்

## பக்கவாதம் குணமாக மருந்து

லண்டன், ஜன. 30—

இளம்பக்கவாதம் ஏற்படுவதற்கான கிருமி எது என்பது இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. இந்தக் கிருமிகள் மூன்று திறுவானவை என்பதை யுனைடெட் ஸ்டேட்ஸ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறனர். கிருமிகளைக் கண்டுபிடித்து விட்டதால் இவ்வியாதியை ஒழிக்கக்கூடிய மருந்தும் சீக்கிரமே ஏற்பட்டுவிடலாம்.

## "மாலை மணி" விற்பனையாளர்களுக்கு

"மாலை மணி" விற்பனையாளர்கள் தங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் ஜனவரி மாச பட்டியல்படி தொகையை பிப்ரவரி 7-ந் தேதிக்குள் அனுப்பிவைப்பதோடு பழைய பாக்கியையும் சேர்த்து அனுப்ப வேண்டுகிறோம். அனுப்பத்தவறும் தோழர்களுக்கு கண்டிப்பாக முன்னறிவிப்பின்றி பத்திரிகை நிறுத்தப்படும் என்பதை அறியவும்.

நிர்வாகி,

"மாலைமணி"

## பாரசீகத்திற்கு ரஷ்ய கோதுமை

டெஹ்ரான், ஜன. 30—

சில காலம் முன்பு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைப்படி பாரசீகத்திற்கு ரஷ்யா 100,000 டன் கோதுமையை அனுப்பியிருக்கிறது. காஸ்பியன் கடலில் மீன் பிடிப்பது சம்பந்தமாக ரஷ்யாவுக்கும் பாரசீகத்திற்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது என்று தெரிகிறதேயொழிய, அதன் முடிவு என்னவாயிற்றென்று தெரியவில்லை.

# உணர்ச்சியூட்டும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழிவுகள் அனைத்தும், கலந்து கொண்ட அனைவர்க்கும் நல்லதோர் உணர்ச்சியையும், விளக்கத்தையும் அளித்ததோடல்லாமல், நகைச்சுவையும் தெளிவையும் உண்டாக்கியிருக்கிறது என்று சொல்லலாம். மாநாட்டிற்குக் கழகத் தோழர்கள் மட்டுமல்லாமல், காங்கிரஸ் தோழர்கள் பலரும், கட்சிசார்பற்றோர் பலரும் கலந்துகொண்டது தனிச் சிறப்பை அளித்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள் என்ன என்பதை அறிந்து கொள்ள, அரசியல் வட்டாரத் தோழர்கள் அனைவரும் விரும்புகிறார்கள் என்பதும் அவர்களிடத்தில் ஒருவித ஆவலுணர்ச்சியை இக்காலம் உண்டாக்கி இருக்கிறது என்பதும் கணியூர் மாநாட்டிலிருந்து இனிது விளங்கிக் கொள்வதென்றாக இருந்தது.

சுற்றுப்புற கிராமங்களிலிருந்து சுமார் 200-க்கு மேற்பட்ட கூண்டுபோன வண்டிகளும், சுமார் 50-க்கு மேற்பட்ட கார்களும் வந்திருந்ததானது மாநாட்டில் கலந்துகொள்ள பலதரப்பட்ட மக்களும் எத்துணை அளவு ஆர்வம் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பது நேரில் கண்டோர்க்கு நன்கு புலனாயிற்று.

மாநாட்டின் மாலை நிகழ்ச்சி இரவு 8-15 மணிக்கு முடிவுற்றது.

தோழர்கள் சி. என். ஏ. கே. ஆர். ஆர்., ஈ. வெ. கி. சம்பத், ராஜேந்திரன், மருதப்பா, மகாலிங்கம் ஆகியவர்கள் நடித்த "சந்திரமோகன்" நாடகம் நடைபெற்றது. நாடகத்தைக் காண சுமார் 25000 மக்கள், பந்தலின் எல்லையையும் தாண்டிச் சென்றிருந்து பார்க்கும் அளவுக்கு வந்து குழுமியிருந்தனர். கூட்டத்தின் பெருக்கம், சமாளிக்க முடியாத அளவுக்குச் சேர்ந்து விட்டதாலும், இடந்தேடிக் கொள்ளும் குழப்பமும், கூச்சலும் ஏற்பட்டுவிட்டதாலும் அமைதி நிலைநாட்ட வேண்டியது தொண்டர்கள் பொறுப்பாகி விட்டது. போலீஸார் தோழமையுணர்ச்சியுடன் தொண்டர்களோடுசேர்ந்து, அமைதியை நிலைநாட்டியது மிகவும் போற்றுவதற்குரியதாக இருந்தது.

காண்போர் களிப்பெய்தும் அளவுக்கு நாடகம் வெற்றிகரமாக நடத்திக் காட்டப்பட்டது. இரவு 1 மணிக்கு நாடகம் இனிது முடிந்தது. பின்னர் வரவேற்புக் குழுச்செயலாளர் தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் மாநாட்டில் பங்கு எடுத்துக் கொண்டவர்களுக்கும், கலந்துகொண்டு சிறப்பித்தவர்களுக்கும் நன்றி கூறினார். மாநாடு சீரும், சிறப்பும் ஒருங்கே பெற்று, கோவை மாவட்டக்கழக வரலாற்றில் தனிச்சிறப்புக்குரிய இடத்தைப் பெற்றுவிட்டது என்றே கூறலாம். மாநாடு இத்துணைச் சிறப்புடன் நடைபெறுவதற்குக் காரணமாக இருந்த தோழர் சே. ஏ. முருகேசன் அவர்களும், அவரைச்சார்ந்த மற்றத்தோழர்களும் பாராட்டுதலுக்குரியவராவார்கள்.

(ஓ-நி)


## வெள்ளி விழா

வாணியம்பாடி இஸ்லாமியா ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஜனாப் K. அப்தல்கொத்தூஸ் சாயபு B. A., L. T. அவர்களின் வெள்ளி விழா 12—2—50 ஞாயிற்றுக் கிழமை மாலை கல்வி மந்திரி கனம் K. மாதவமேனன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தலைமை ஆசிரியருக்கு ரூபாய் 5,000 கொண்ட பணமுடிப்பு பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அனுதாபிகள் சார்பாக அளிக்க முடிவுசெய்துள்ளதால் வாக்களித்துள்ளவர்களும், விரும்புபவர்களும் கீழ்க்கண்ட முகவரிக்கு நன்கொடைகளை அனுப்ப வேண்டப்படுகிறார்கள்.

வே. ச. விசுவநாதம், தலைவர்,

வெள்ளி விழா கமிட்டி, வாணியம்பாடி.



(1) அன்பு என்றால்? (2) இன்பம் என்றால்?

(3) வாழ்க்கை என்றால்? (4) இல்லறம் என்றால்?

(5) காதல் என்றால்?

இன்னும் பற்பல கேள்விகளுக்கு விடை கிடைக்காது தவிக்கின்றனா. ஆனால் இவைகளை மாதாமாதம் படித்து இன்புற ஒரு மாதப் பத்திரிகை வெளிவருகிறது அதுவே...

## காதல் கடல் (ஒரு தமிழ் காதல் சித்திரம்)

இதில் நேயர்கள் கேட்கலாம், மணி யோசை, காதல் கடிதங்கள், சினிமா பேசுகிறது, நண்பர்களின் தொடர்பு முதலிய பல அம்சங்களோடு கலர் படங்களுடன் 0-2-6 விலையில் வருகிறது.

ஏஜண்டுகள் உடனே தேவை

'காதல் கடல்' அலுவலகம்,

மவுண்ட்ரோட், மதராஸ்.


## கலகங்களை அடக்க தொண்டர்படை

### மலேயாவில் உருவாகிறதாம்

கோலாலம்பூர், ஜன. 31—

மலேயாவில் கலகங்களை அடியோடு அடக்க, மாபெரும் தொண்டர் படையை அமைக்க முயற்சி செய்யப்பட்டு வருகின்றன. இப்படையில் வியாபாரிகள், குமாஸ்தாக்கள், டாக்டர்கள், கடைக்காரர்கள், ரப்பர், தகர தொழில் முதலாளிகள் ஆகிய பலரும் ஆயிரக்கணக்கில் பதிவு செய்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படையில் சேரும்படி பலத்த பிரசாரம் செய்யப்படுகின்றன. நகரெங்கும் பெரும் சுவரொட்டிகள் காணப்படுகின்றன. விமானங்களிலிருந்து படையில் சேரும்படி கோரும் துண்டுப்பிரசுரங்கள் வீசப்படுகின்றன.

ஆயிரக்கணக்கானவர் கடற்கரையோரத்தில் காவல் புரிய முன்வந்திருக்கின்றனர்.

## இனி நடப்பவை

சென்னை:—நகரீர் கழகத்தின் சார்பில் 2—2—50 வியாழன் மாலை 6 மணிக்கு, தோழர் வல்லபால சுப்ரமணியம் பி. ஏ. தலைமையில் திருவள்ளுவர் நினைவு நாள் கொண்டாடப் பெறும். தோழர்கள் ஜி. செல்வராசம் பி. எல். இ புலவர் தணிகை உலகநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். இடம்: தொண்டைமண்டலம் உயர் நிலைப்பள்ளி, தசகசாலைத் தெரு.

* * *

செயங்கொண்டம்:—இவ்வூர் "அறிவு நிலைய" இலவச வாசகசாலையின் முதலாவது ஆண்டு விழா, 3-2-50 வெள்ளி மாலை 5 மணிக்கு நடைபெறும். தோழர் அ. ஆரோக்கியசாமி பி. எஸ். ஸி. பி. டி. தலைமை வகிப்பார். தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ, புலவர் ஊ. அரங்கசாமி ஆகியார் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

மாயவரம்:—இந்நகர் தி. மு. கழகத்தின் சார்பில் 4-2-50 சனி மாலை 6 மணிக்கு நகராட்சி பூங்காவில் ஒர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழியர் மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் தலைமையில் தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ, என். வி. நடராசன் ஆகியோர், சொற்பொழிவாற்றுவர்.

## விதவை மணம்

தோழர் பெருமாள்சாமி, தோழியர் கிருட்ணம்மாள் (விதவை) ஆகியோரின் திருமணம் 25-12-49-ல், மதுரை, கைலாசபுரத்தில் தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெற்றது. தோழர் அய்யாசாமி விதவை மணத்தை விளக்கிப் பேசினார்.

## அனைத்திந்திய குடியரசுக்கட்சி

### செயற்குழு அமைப்பு

சென்னை, ஜன 3—

புதிதாக துவக்கப்பட்டிருக்கும் அனைத்திந்திய குடியரசுக் கட்சியின் கூட்டமொன்றில் மாகாண செயற்குழுவினராகக் கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்:

தோழர் எச். டி. ராஜா தலைவர், தோழர் எஸ். இராமநாதன் செயலாளர், தோழர் சி. டி. பழனியப்பன் பொருளாளர்.

## க. அன்பழகன்

தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் கீழ்க்கண்டவாறு சுற்றுப் பயணம் செய்வார்.

3-2-50 ஜெயங்கொண்டம்,

4-2-50 மாயவரம்

5-2-50 கும்பகோணம்

காலை தி.மா. மு. கழகம்

மாலை: வள்ளுவர் கழகம் பொதுக் கூட்டம்.

## உக்ரைன் பற்றி மாஸ்கோ கவலை?

லண்டன், ஜன. 30—

விவசாயமும் கைத்தொழிலும் மிகுதியாகவுள்ள உக்ரைன் கட்டுக்கடங்காமல் இருப்பது குறித்து கிரெம்லினில் கவலை ஏற்பட்டிருப்பதாக இங்கு செய்திகள் கிடைத்திருக்கின்றன.

அங்குள்ள அநேக கம்பெனி தலைவர்களின் சீட்டு கிழிக்கப்பட்டதென்றும், அங்குள்ள ஜனங்கள் மாஸ்கோ கெடுபிடிக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார்கள்.

இப்பிரதேசத்தின் எதிர்ப்பு காரணமாக என்ன நேருமோ என்று ரஷ்ய அதிகாரிகள் கவலை கொண்டிருக்கின்றனர். மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டிருப்பதால் இங்கு விவசாயமும் கைத்தொழிலும் சரிவர நடைபெறவில்லை.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street, Madras-1.